செ.வெ.எண்: 107 நாள்: 04-04-2021

**திருநெல்வேலி மாவட்ட தேர்தல் அலுவலரும் மாவட்ட ஆட்சித்தலைவருமான திரு.வே.விஷ்ணு, இ.ஆ.ப., அவர்கள் தேசிய தகவலியல் மையத்தின் மூலம் உருவாக்கப்பட்ட ஜி.ஐ.எஸ் தொழில்நுட்பத்தில் இணைய தள வழி வாக்குச் சாவடி வழிகாட்டியினை தொடங்கி வைத்தார்கள்**

திருநெல்வேலி மாவட்ட தேர்தல் அலுவலரும் மாவட்ட ஆட்சித்தலைவருமான திரு.வே.விஷ்ணு, இ.ஆ.ப., அவர்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் தமிழ் நாட்டில் முதன் முறையாக தேசிய தகவலியல் மையத்தின் ஜி.ஐ.எஸ் தொழில்நுட்பத்தில் இணைய தள வழி வாக்குச் சாவடி வழிகாட்டி செயலியினை இன்று (04.04.2021) அறிமுகப்படுத்தினார். இதன்மூலம் வாக்காளர்கள், தேர்தல் அலுவலர்கள் எளிதாக தங்கள் வாக்குச் சாவடியை தெரிந்து கொள்ளலாம்.

இத்துடன் இணைக்கப்பட்டுள்ள QR Code யை scan செய்தோ அல்லது https://tirunelvelielections.in என்ற இணைய தள முகவரியில் வாக்காளரோ அல்லது சட்டமன்ற தேர்தல் பணிக்கு செல்லும் தேர்தல் பணியாளர்களோ, சட்டசபை தொகுதி மற்றும் வாக்குச் சாவடி எண் ஆகியவற்றை கொடுத்து, பின்னர் தற்போதைய இருப்பிடத்தையும் கொடுத்தால் நமது வாக்குச் சாவடிக்கு செல்லும் வழி, அந்த வாக்குச் சாவடியின் 360 கோண வடிவத்தில் உட்புற தோற்றம், மாதிரி வாக்குச் சாவடியின் உட்புற தோற்றம் போன்ற விபரங்களை எளிதில் தெரிந்து கொள்ளலாம்.

மேலும் இந்த கொரோனா தொற்று நோய் காலத்தில் வாக்காளர்கள் வாக்குச் சாவடிக்கு சென்று வாக்களிக்கும் முறையை எளிதாக விளக்கும் வகையில் வாக்காளர் கையேடு ஒன்றும் இணைக்கப்பட்டுள்ளது.

வாக்காளர்கள் இந்த புதிய வசதியினை பயன்படுத்தி வருகிற சட்டமன்ற தேர்தல் நாளன்று 100 சதவீத வாக்குப்பதிவினை செய்திட வேண்டுமென்று என மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சியருமான திரு.வே.விஷ்ணு, இ.ஆ.ப., அவர்கள் கேட்டுக் கொண்டாகள்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.ஆ.பெருமாள், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு.எம்.கணேஷ் குமார், தேசிய தகவலியல் மைய அலுவலர்கள் திரு.எஸ்.தேவராஜன், திரு.பி.ஆறுமுகநயினார், பிராண்ட் மேக்ஸிமா நிறுவனர் திரு.விக்னேஷ் அண்ணாமலை மற்றும் தேசிய தகவலியல் மைய ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியிடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி**